தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் (மேல்நிலைக் கல்வி) செயல்முறைகள்,
சென்னை-6.

ந.க.எண்.075158/டபிள்யு1/இ1/2023 நாள் 23.01.2024

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் – 31-12-2021 அன்று பதவி உயர்வு வழங்கப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு பணிவரன் முறை கருத்துருக்கள் அனுப்பிட – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை : 1. சென்னை-06, பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (மேல்நிலைக் கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.3720/டபிள்யு1/இ1/2019 நாள் 28.12.2021
2. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு டபிள்யு.பி.7091/2020 நாள்.24.09.2021

-------

தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணியில் 01.01.2019 நிலவரப்படியான முன்னுரிமைப் பட்டியல் அடிப்படையில் அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு சுழற்சிப் பட்டியலில் உள்ள முதுகலை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு 11.11.2019 இல் கலந்தாய்வு நடைபெற்றுள்ளது.

கலந்தாய்விற்குபின் கூடுதல் முன்னுரிமைப் பட்டியலின் படியும் பார்வை 2இல் கண்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.7091/2020 நாள்.24.09.2021 நாளிட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் பார்வை-1 இன்படி கூடுதல் முன்னுரிமை பட்டியல் வெளியிடப்பட்டு 31.12.2021 அன்று மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களின் பணிவரன்முறை கருத்துருக்கள் அனுப்புவது சார்ந்து கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

- 31.12.2021 இல் மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு மூலம் பணியில் சேர்ந்தவர்களின் பணிவரன்முறை கருத்துரு முழுமையாகவும், ஒட்டுமொத்தமாகவும் (Consolidated Proposal) தயார்செய்து முதன்மைக் கல்வி அலுவலரால் அனுப்பப்படல் வேண்டும்.
- இக்கருத்துருவில் எவரது பெயரும் விடுபடவில்லை என்பதற்கும் முழுமையாக உள்ளது என்பதற்கும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் சான்று அளிக்க வேண்டும்.
- இக்கருத்துருவில் 31.12.2021 இல் பதவி உயர்வு பெற்ற மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பெயர் ஏதேனும் விடுபட்டால் அதற்கான முழு பொறுப்பும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரே ஏற்க வேண்டும்.

- ❖ எக்காரணம் கொண்டும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் பணிவரன்முறை கருத்துரு தனித்தனியாக அனுப்ப கூடாது.

- ❖ மேற்குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி இணைப்பில் உள்ள **Excel** படிவத்தில் மருதம் Font இல் முழுமையாக பூர்த்தி செய்து 24.01.2024 மாலை 4.00 மணிக்குள் இவ்வியக்கக W1 பிரிவு மின்னஞ்சல் W1dsetn@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பிவிட்டு, முதன்மைக் கல்வி அலுவலரால் கையொப்பமிடப்பட்ட பிரதியினை பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) பெயரிட்ட உறையில் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : படிவம்

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(மேல்நிலைக் கல்வி)

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

01.01.2019 நிலவரப்படியான கூடுதல் முன்னுரிமைப்பட்டியலின்படி 30.12.2021 அன்று நடைபெற்ற அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வில் பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்தவர்கள் விவரம்

கல்வி மாவட்டம் :

| வ. எண். | சுற்றிச் பட்டியல் வரிசை எண். | பெயர் | பதவி முதுகலை/ உ.நி.ப.த. ஆசிரியர் | பாடம் | பள்ளியின் பெயர் | முகவரி | மாவட்டம் | மே.நி.ப.த. ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற பள்ளியின் பெயர் | பதவி உயர்வு பெற்ற பள்ளியின் முகவரி | மாவட்டம் | மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியில் சேர்ந்த நாள். மு.ப/பி.ப |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)